## 7

# பெற்றோர்த்துவத்திற்கான மூன்று Rகள் [கடமைகள்]

***வேதபாடப் பகுதி:*** *நீதிமொழிகள் 22:6.*

*(இப்பாடத்தில் பெற்றோருக்கான மூன்று* Rகள் *என்பதன்கீழ்* Responsibility *[பொறுப்பு],* Respect *[மதிப்பு] மற்றும்* Reassurance *[மறுஉறுதிப்பாடு] ஆகிய துணைத்தலைப்புக்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.)*

*ஐந்து வயதுப் பிள்ளைகளுக்கான வேதாகம வகுப்பு ஆசிரியை ஒருவர் தனது பாடத்தைச் சற்றே முன்னதாக முடித்திருந்தார்.*[1] *அப்பெண்மணி தனது மாணவர்களிடம் மேஜையின்மீது தலைகவிழ்ந்து, "மகிழ்ச்சியான ஒரு சிந்தனையை நினைத்துப்பார்க்கும்படி" கூறினார். அவர் மேஜைகளைச் சுற்றுச் சென்றுபார்த்து, ஒவ்வொரு மாணவமாணவியையும், அவனது அல்லது அவளது "மகிழ்ச்சியான சிந்தனை" எது என்று கேட்டார். ஒரு சிறுமி, "நான் கர்ப்பமாய் இருக்கிறேன் என்று நான் நினைக்கிறேன்" என்று கூறினாள். திகைப்படைந்த அந்த ஆசிரியை, அந்த "மகிழ்ச்சியான சிந்தனை" எங்கிருந்து வந்தது என்று கேட்டார். அந்த சிறுமி, "இன்று காலையில், என் அம்மா காலை உணவிற்கு வந்தபோது, 'நான் கர்ப்பமாய் இருக்கின்றேன் என்று நினைக்கின்றேன்' என்று சொன்னார்கள், அதற்கு என் அப்பா, 'அது ஒரு மகிழ்வான நினைவாகவே உள்ளது' என்று கூறினார்" என்றாள்.*[2]

*ஒரு பிள்ளை பிறக்கப்போகிறது என்பது "ஒரு மகிழ்வான சிந்தனையாக" உள்ளது - ஆனால் அது ஒரு அச்சுறுத்தும் சிந்தனையாகவும் உள்ளது. பெற்றோராகவிருக்கும் பலர், சிம்சோனின் தகப்பனான மனோவா "பிறக்கப்போகிற பிள்ளைக்காக நாங்கள் செய்யவேண்டியதை எங்களுக்குக் கற்பிப்பதற்காக" (நியாயாதிபதிகள் 13:8) தேவனிடத்தில் அவரது செய்தியாளரைத் திரும்ப அனுப்பும்படி கெஞ்சியபோது உணர்ந்த அதே போன்று உணருகின்றனர்.*

*நமது பிள்ளைகளுக்கு நாம் "என்ன செய்ய வேண்டும்" என்பதைக் கற்றுக்கொள்வதற்கு நாம் வேதாகமத்தின் பல இடங்களைத் திருப்பிப்பார்க்க முடியும், ஆனால் இந்தப்பாடத்தில் நாம் நீதிமொழிகள் 22:6ன்மீது மாத்திரம் கவனம் செலுத்துவோம். நமது முந்திய பாடத்தில் நாம், "பெற்றோர்த்துவத்திற்குத் தேவனுடைய முக்கியதிட்டம்" என்பதைப் பற்றி உபாகமம் 6ஐப் படித்தோம். இந்தப் பாடத்தில் நாம், அந்த அஸ்திபாரத்தின்மீது கட்டியெழுப்ப விரும்புகின்றோம்.*

நீதிமொழிகள் 22:6 நம்மில் பலருக்கு நன்கு பழக்கமானதாக உள்ளது: "பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து, அவன் முதிர் வயதிலும் அதை விடாதிருப்பான்." இவ்வேதவசனப்பகுதியிலிருந்து நாம், "பெற்றோர்த்துவத்திற்கான மூன்று Rகளைக்" கண்டறிவோம். சில பள்ளிகளில், கல்வியின் மூன்று "R"[3]களில் இருந்து தங்கள் கவனக்குவிப்பை விலக்கும்போது, அந்த பள்ளிகளில் உள்ள மாணவர்கள் வாசிக்கக் கற்பதில்லை. பெற்றோர்கள் "பெற்றோர்த்துவத்திற்கான மூன்று Rகளை" புறக்கணித்துவிட்டால், விளைவுகள் அதைக்காட்டிலும் மோசமானவைகளாய் இருக்கும்.

## பொறுப்பு [Responsibility]

"பொறுப்பு" (responsibility) என்பது முதல் R ஆக உள்ளது. பெற்றோர்கள் என்ற வகையில் நாம் நமது பிள்ளைகளுக்குப் போதிக்கும் மற்றும் பயிற்றுவிக்கும் பொறுப்பைக் கொண்டுள்ளோம் (உபாகமம் 6:3-7; எபேசியர் 6:4 ஆகியவற்றைக் காணவும்). நமது வேதவசனப்பகுதியில், அந்தப் பொறுப்பு பின்வரும் வார்த்தைகளில் வலியுறுத்தப்படுகிறது: "பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து." இந்தச் சொற்றொடரில் "பிள்ளையானவன்" மற்றும் "நடத்து" என்பவை திறவுகோல் வார்த்தைகளாக உள்ளன.

முதலில் நாம் "நடத்து" என்ற வார்த்தையைக் கண்ணோக்குவோம்: ஒரு பிள்ளையை நடத்துவது என்பது எதை அர்த்தப்படுத்துகிறது? இதற்கான ஆங்கில வார்த்தையாகிய train என்பதற்கான விளக்கங்கள் பின்வருவன போன்ற சிந்தனைகளை உள்ளடக்குகிறது: (1) விரும்பிய வகையில் வளரச் செய்தல் (இது திராட்சக்கொடி பந்தலில் படரும்படி செய்தல் போன்றது); (2) அறிவுறுத்துதல் மூலம் வடிவமைத்தல், சிட்சித்தல் அல்லது பயிற்றுவித்தல்; (3) திறமைக்கான சோதனைக்கென்று (பயிற்சியின்மூலம்) ஆயத்தமாக்குதல், இவ்விதமாக நாம் ஒரு திராட்சக்கொடியைப் பயிற்றுவித்தல், ஒரு விலங்கைப் பயிற்றுவித்தல் அல்லது ஒரு விளையாட்டு நிகழ்ச்சிக்காகப் பயிற்றுவித்தல் ஆகியவை பற்றிப் பேசுகின்றோம்.

ஆங்கில வார்த்தையை ஆழ்ந்து சிந்திக்கும்போதேகூட, பயிற்றுவித்தலுக்குக் காலமும் முயற்சியும் தேவைப்படுகின்றன என்பதை நாம் காணுகின்றோம். ஆகையால் நாம், நமது பிள்ளைகளைப் பயிற்றுவிப்பதற்கு, அதாவது நாம் அவர்களைக் கர்த்தரின் ஊழியத்திற்கென்று பயிற்றுவித்தல் பற்றிப் பேசினாலும் அல்லது நடைமுறை விஷயங்களான, அவர்களின் படுக்கையைச் சரிசெய்தல் அல்லது அவர்களின் உடைகளைச் சரிசெய்தல் பற்றிப் பேசினாலும், அவற்றிற்குக் காலத்தையும் முயற்சியையும் நாம் ஒப்புக்கொடுக்க வேண்டும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

கூறுதல், போதித்தல் மற்றும் பயிற்றுவித்தல் ஆகியவற்றிற்கு இடையில் ஒரு வித்தியாசம் ஏற்படுத்தப்படவேண்டும். கூறுதல் என்பது நல்லது; போதித்தல் என்பது உயர்ந்தது; ஆனால் பயிற்றுவித்தல் என்பது மேன்மையானது. இந்த மூன்றுக்கும் இடையில் உள்ள வேறுபாடு என்ன? அதை

விளக்குவதற்கு என்னை அனுமதியுங்கள்:[4] உங்கள் பிள்ளை வீட்டிற்குள் வந்து கதவை அறைந்து மூடுகின்றான். (அவன் பெயர் ராஜா என்று வைத்துக்கொள்வோம்.) நீங்கள், "ராஜா, தயவுசெய்து கதவை அறைந்து மூடாதே" என்று கூறுகின்றீர்கள். அது கூறுதலாக இருக்கிறது. ஒருவேளை நீங்கள், அவன் கதவை அறைந்து மூடுவதை ஏன் விரும்பவில்லை என்று விளக்குவதற்கு நேரம் எடுத்துக்கொள்ளலாம். "அது கதவுக்கு நல்லதல்ல, அது எனது நரம்புகளுக்கும் நல்லதல்ல." அது போதித்தலாக உள்ளது. ராஜா கதவை அறைந்து மூடும் பழக்கத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்று நீங்கள் தீர்மானிக்கும்போது நடப்பது என்ன? இப்போதில் இருந்து அவன் கதவை அறைந்து மூடும் ஒவ்வொரு வேளையும் அவன் மீண்டும் வெளியே சென்று, திரும்பவும் வந்து, கதவை மெதுவாக மூடவேண்டும் - இதை இருபத்தி ஐந்து முறை செய்ய வேண்டும் என்று நீங்கள் அவனிடம் சொல்வீர்கள். நீங்கள் அந்தத் திட்டத்தைச் சரியாக நிறைவேற்றி, அவனிடத்தில் தேவைப்படும் செயலில் சீராக நிலைத்திருந்தால், அது பயிற்றுவித்தலாக உள்ளது.

"Train" என்ற ஆங்கில வார்த்தை மறைவான அர்த்தங்கள் பலவற்றைக் கொண்டுள்ளது, ஆனால் "train" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள எபிரெய வார்த்தை அதைவிட அதிகமான அர்த்தங்களை மறைவாக உணர்த்துகிறது. இதன் மூலவேர் வார்த்தை, "மேல்வாய் எனப்படும் வாயின் கூரைப்பகுதி, ஈறுகள்" என்பதற்கான சொற்றொடரில் இருந்து வருவதாக உள்ளது. வினை வடிவத்தில், இது "உடைத்தல்" அல்லது ஒரு காட்டுக்குதிரையை அதன் வாயில் ஒரு கயிற்றை இட்டுப் பயன்படுத்துவதன் மூலம் கீழ்ப்படிதலுக்குள் கொண்டுவருதல் என்பதற்குப் பயன்படுத்தப்படும் வார்த்தையாக இருந்தது. இந்தச் சொற்றொடர், பிள்ளை பிறந்தவுடன் பிரசவம் பார்க்கும் மருத்துவச்சி தனது விரலை, நசுக்கப்பட்ட பேரீச்சம் பழங்களுக்குள் தோய்த்து, பச்சிளம் குழந்தையின் வாய்க்குள் அதையிட்டு, சுவை உணர்ச்சியை ஏற்படுத்தி தாகத்தை உண்டாக்குவதற்காக அக்குழந்தையின் ஈறுகளையும் மேல்வாயையும் தேய்த்துவிடும் செயல்பாட்டை விவரிக்கவும் பயன்படுத்தப்பட்டது. பின்பு அவள் அந்தக் குழந்தையைத் தாயின் கரங்களில் ஒப்படைப்பாள். இவ்வார்த்தை சிலவேளைகளில், (வர்த்தகரீதியாக ஏற்கனவே தயாரிக்கப்பட்ட குழந்தை உணவு வருவதற்கு முன்னர்) ஒரு தாய் தனது குழந்தை திட உணவை உண்ணக் கற்றுக்கொள்வதற்காக, அக்குழந்தையின் உணவை முன்னதாக தான் மென்று கொடுத்தலை விவரிக்கவும் பயன்படுத்தப்பட்டது. கடைசியாக இந்தச் சொற்றொடர், "அர்ப்பணிக்க, பரிசுத்தப்படுத்த" என்பதை அர்த்தப்படுத்தவும் வந்தது. "Train" என்று மொழிபெயர்க்கப்பட்ட இந்த எபிரெயச் சொல்லானது பிள்ளைகளுக்குப் பயன்படுத்தப்படும்போது, அந்தப்பிள்ளை எவ்விடத்தில் மேம்படுத்தப்பட்டிருக்க வேண்டும் - மற்றும் அவனை அந்த நிலைக்குக் கொண்டுவருவதற்கு என்னவெல்லாம் செய்யப்படவேண்டும் - என்பதை உள்ளடக்குகிறது.

அடுத்ததாக நாம், "பிள்ளை" என்ற வார்த்தையைப் பற்றி ஆழ்ந்து

சிந்திக்கலாம், ஏனெனில் இந்தச் சொற்றொடர் சிலவேளைகளில் தவறாகப் புரிந்துகொள்ளப்படுகிறது. “பிள்ளை” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள எபிரெயச் சொல்லானது மிகச்சிறிய பிள்ளையைக் குறிப்பதாக மாத்திரம் இருப்பதில்லை. 1 சாமுவேல் 4:21ல் பயன்படுத்தப்பட்ட வார்த்தையானது புதிதாய்ப் பிறந்த குழந்தையைக் குறிப்பிடுவதாக இருக்கையில், 1 சாமுவேல் 1:27ல் இது பால்குடி மறந்த ஒரு பையனைக் குறிப்பிடுவதாக உள்ளது. இதே வார்த்தை, ஆதியாகமம் 21:16ல், முன்-இளம் வயதுகளில் உள்ள ஒரு பையனைக் குறிப்பிடுகிறது, ஆதியாகமம் 37:2ல் பதினேழு வயதுப் பையனையும், ஆதியாகமம் 34:19ல் திருமணத்திற்குத் தயாராக உள்ள ஒரு இளைஞனையும் குறிப்பிடுகிறது. இவ்விதமாக இவ்வார்த்தையானது, பெற்றோர்களின் நிழலில் உள்ள ஒரு மகனை அல்லது மகளை, அவனது அல்லது அவளது பிறப்பு தொடங்கி இளம்வயது வரையுள்ள படிநிலைகளின் வருடங்கள் யாவற்றிற்கும் பயன்படுத்தப்படுகிறது.[5]

“நடத்துதல்” மற்றும் “பிள்ளை” என்ற சொற்களுக்கான இந்த மறைவான அர்த்தங்கள் யாவற்றையும் சிந்தையில் கொண்டவர்களாய் நாம், “பிள்ளையானவனை நடத்துதலில்” நம்மிடம் கேட்கப்படுகிற பொறுப்புகள் யாவை என்று கண்ணோக்க முடியும்:

(1) நமது பிள்ளைகளைப் பயிற்றுவிப்பதற்கு நமக்கு அறிவு தேவைப்படுகிறது. அவசியமான மற்ற தகவல்களுடன்கூட, விருப்பமான “முடிவில் கிடைப்பது” பற்றிய அறிவையும் நாம் கொண்டிருக்க வேண்டும். அந்த இலக்கை அடைவது எப்படி என்பதையும் நாம் அறிந்திருக்க வேண்டும்.

(2) நமது பிள்ளைகளைப் பயிற்றுவிப்பதற்கு நேரம் தேவைப்படுகிறது. இந்தப் பாடத்தொடரின் முற்பகுதியில் நான் பகிர்ந்து கொண்டதுபோல், அவசியமான நேரத்தைக் கண்டறிதல் என்பது பெற்றோர்களில் பலர் எதிர்கொள்ளுகின்ற மாபெரும் அறைகூவலாக உள்ளது.[6] நீண்ட காலத்திற்கு முன், சிறைக் கைதி ஒருவனைக் காவல்காக்கும் தனது பொறுப்பைக் குறித்து ஒரு வேலைக்காரன் பின்வரும் கூற்று ஒன்றை ஏற்படுத்தினான்: “உமது அடியான் இங்கும் அங்கும் அலுவலாயிருக்கும்போது, அவன் போய்விட்டான்” (1 இராஜாக்கள் 20:40).[7] சில பெற்றோர்கள் “இங்கும் அங்கும் அலுவலாய்” மாத்திரம் இருக்கின்றனர். ஒருநாளில் அவர்கள் கண்ணோக்கிப் பார்ப்பார்கள், அப்போது அவர்களின் பிள்ளைகள் - வாழ்விற்கென்று பயிற்றுவிக்கப்படாமல், ஆயத்தப்படுத்தப்படாமல் - அவர்களைவிட்டுக் கடந்து சென்றிருப்பார்கள்.

நமது பிள்ளைகளுக்கென்று நேரத்தை எடுத்துக்கொள்ளாமல் நாம், அவர்களுக்குப் பயிற்றுவிப்பதில் அடங்கியுள்ள யாவற்றையும் செய்ய முடியாது. பின்வருவதைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள்: நமது பிள்ளைகள் நம்முடன் சற்றுக்காலம்தான் இருக்கின்றனர். அந்தக் காலவேளையில், நாம் நமது முன்னுரிமைகளைக் குறித்து செயல்பட்டு, அவர்களைப் பயிற்றுவிக்க நேரத்தைச் செலவிடுவோமாக. நாம் விருந்தினர்களை நமது இல்லங்களுக்கு அழைக்கும்போது, பொதுவாக நமது பணிஅட்டவணைகளை மாற்றி அமைத்து அவர்களையும் அவர்களின் தேவைகளையும் கவனிப்பதென்பது

உண்மையல்லவா? நம்முடைய பிள்ளகளுக்கு நாம் இதைவிடக் குறைவாகச் செய்ய வேண்டுமா? 2 கொரிந்தியர் 12ல் பவுல், கொரிந்தியர்கள்மீது தாம் கொண்டுள்ள அன்பை, பெற்றோர் தங்கள் பிள்ளைகள்மீது கொண்டுள்ள அன்புடன் ஒப்பிட்டு உரைத்தார் (வசனம் 14). அத்துடன் அவர், "மிகவும் சந்தோஷமாய் உங்கள் ஆத்துமாக்களுக்காகச் செலவு பண்ணவும் செலவுபண்ணப்படவும் விரும்புகிறேன்" என்றும் கூறினார் (வசனம் 15ஆ). பெற்றோர் என்ற வகையில் நாம் நமது பிள்ளைகளுக்காகச் "செலவு பண்ணவும் செலவுபண்ணப்படவும்" மனவிருப்பமாய் இருக்க வேண்டும்.

(3) நமது பிள்ளைகளை பயிற்றுவித்தலுக்கு பொறுமையும் தேவைப்படுகிறது. திராட்சக்கொடிகள், மிருகங்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் ஆகியோருக்கு ஒரே இரவில் பயிற்றுவிக்க முடியாது - அதேபோல் தான் பிள்ளைகளுக்கும். நாம் "எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாய் இருக்கும்படி" கட்டளைபெற்றுள்ளோம் (1 தெசலோனிக்கேயர் 5:14ஈ); நிச்சயமாகவே, இது நமது பிள்ளைகளையும் உள்ளடக்குவதாயிருக்கிறது.

நமது பிள்ளைகளைப் பயிற்றுவிப்பதற்கான மற்ற இன்றியமையாத விஷயங்களைக் குறிப்பிட முடியும்.[8] இவற்றில் ஒன்றான கூருணர்வு என்பது நமது படிப்பின் அடுத்த பகுதியில் கலந்துரையாடப்படும்.

## மதிப்பு [Respect]

"மதிப்பு" என்பது இரண்டாவது R ஆக உள்ளது. மதிப்பு என்பது பலமான, மகிழ்ச்சியான கிறிஸ்தவக்குடும்பங்களின் அத்தியாவசியமான பாகமாக உள்ளது என்று நாம் ஏற்கனவே பலமுறை வலியுறுத்தி இருக்கின்றோம். மதிப்பு என்பது வாழ்வுடன் ஈடுகொடுத்துச் செயல்படக்கூடிய பிள்ளைகளை வெற்றிகரமாய் வளர்ப்பதற்கு அத்தியாவசியமானதாக உள்ளது.

மதிப்பிற்கான அவசியம் என்பது திருமணம் மற்றும் பெற்றோர்த்துவம் பற்றியதான ஏறக்குறைய ஒவ்வொரு புத்தகத்திலும் ஊடாடுகின்ற ஒரு நூலாக உள்ளது. அதே வலியுறுத்தம் வேதாகமத்திலும் காணப்படுகிறது. "மகிமை" மற்றும் "கனம்" என்பதுடன் "மதிப்பு"[9] என்ற வார்த்தையும் இக்கருத்தைக் கொண்டுவருவதற்கான வேதாகம வார்த்தைகளாக உள்ளன. குடும்பத்தின் எல்லா உறுப்பினர்களுக்கும் இடையில் மதிப்பிற்கான தேவையை அதிகமாய் வலியுறுத்த வேண்டியதில்லை.

தந்தையானவர் தாயை மதிக்க வேண்டும்.[10] பேதுரு, எல்லாக் கணவர்களும் "விவேகத்தோடும் அவர்களுடன் [தங்கள் மனைவி யர்களுடன்] வாழ்ந்து, உங்களுடனேகூட அவர்களும் நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக் கொள்ளுகின்றவர்களானபடியினால், அவர்களுக்குச் செய்யவேண்டிய கனத்தைச் செய்யுங்கள்" என்று அறைகூவல் விடுத்தார் (1 பேதுரு 3:7). நீதிமொழிகள் 31ல் உள்ள "குணசாலியான ஸ்திரீ"யைப் பற்றிய கலந்துரையாடல், அவளது கணவன் எழும்பி "அவளைப் புகழுகிறான்" (வசனம் 29) என்று குறிப்பிடுகிறது.

தாயானவள் தந்தையை மதிக்க வேண்டும். பவுல், "மனைவியும்

*புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக்கடவள்" என்று தெளிவாகக் கூறினார் (எபேசியர் 5:33ஆ). கிறிஸ்தவரல்லாத கணவரிடத்தில் அவரது மனைவியின் நடக்கை எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு 1 பேதுரு 3ம் அதிகாரம், ஒரு நீண்ட பகுதியைக் கொண்டுள்ளது (வசனங்கள் 1-6). இந்தப் பகுதி பின்வருமாறு தொடங்குகிறது: "மனைவிகளே, உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; அப்பொழுது ... பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக்கொள்ளப் படுவார்கள்" (வசனங்கள் 1, 2). ஒரு கிறிஸ்தவ மனைவி, கிறிஸ்தவரல் லாத தனது கணவனுக்கு மதிப்பளிக்க வேண்டுமென்றால், விசுவாசியான மனைவி விசுவாசியான தனது கணவனுக்கு எவ்வளவு அதிகமாய் மதிப்பளிக்க வேண்டும்!*

*பிள்ளைகள் தங்கள் பெற்றோரை மதிக்க வேண்டும். இந்த அம்சத்தில் மிகவும் நன்றாக அறியப்பட்டுள்ள வேதவசனப்பகுதி, எபேசியர் 6ஆகும்: "பிள்ளைகளே உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம். உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும், உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங்கற்பனை யாயிருக்கிறது" (வசனங்கள் 1-3).*[11]

*மேலும், பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை மதிக்க வேண்டும். பிதாக்களுக்குப் பவுல் பின்வரும் அறைகூவலை விடுவித்தார்: "பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக" (எபேசியர் 6:4). இவ்வசனத்தின் முதல் பகுதியை,* The Living Bible *என்ற வேதாகமம் பின்வருமாறு பொழிப்புரைப்படுத்தியுள்ளது: "உங்கள் பிள்ளைகளை திட்டியும் ஏளனம் செய்தும் அவர்களைக் கோபமும் வெறுப்புணர்வும் கொள்ளச் செய்யாதீர்கள்." மீண்டும் பவுல், "பிதாக்களே, உங்கள் பிள்ளைகள் திடனற்றுப்போகாதபடி, அவர்களுக்குக் கோபமூட்டா திருங்கள்" (கொலோசெயர் 3:21). சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை மதிப்பற்ற விதத்தில் நடத்துதல் என்பது இவ்வசனப் பகுதிகளை மீறும் செயலாக உள்ளது: அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு "ஊமைகள்" என்றோ அல்லது "சோம்பேறிகள்" என்றோ பெயரிட்டுவிடுகின்றனர். அவர்களின் கடந்தகாலத் தவறுகளைத் தொடர்ந்து நினைவுக்குக் கொண்டு வருகின்றனர். அவற்றிற்காக அவர்கள் தங்கள் பிள்ளைகளை நீண்ட நாட்களுக்கு முன்பே தண்டித்திருந்தாலும், இவ்வாறு செய்கின்றனர். அவர்கள் தங்கள் பிள்ளைகளைப் பற்றி பிறரிடத்தில் எதிர்மறையாகப் பேசுகின்றனர். ஜேம்ஸ் டோப்ஸன் என்பவர் பின்வருமாறு கூறினார்,*

> *ஒருபுறமிருந்து மாத்திரம் வரும் விஷயமாக இருக்கையில் மதிப்பு என்பது வெற்றியற்றதாக உள்ளது: இது ஒரு இருவழிச் சாலைமீது செயல்படுத்தப்பட வேண்டும். தன் பிள்ளையைக் கண்ணியமாக நடத்தாத ஒரு தாய், தன்னை அவன் கண்ணியமாய் நடத்தும்படிக்*

கேட்க முடியாது. அவனது தன்முனைப்பை அவள் மென்மையாய்க் கையாள வேண்டும், அவனது நண்பர்கள் முன்னிலையில் அவனை அவள் ஒருக்காலும் சிறுமைப்படுத்தவோ அல்லது சங்கடப்படுத்தவோ கூடாது. தண்டனை என்பது எப்போதுமே, உற்றுப்பார்க்கும் அந்நியர்களிடமிருந்து முற்றிலும் புறம்பாகவே வழக்கமாய்ச் செயல்படுத்தப்பட வேண்டும். பிள்ளையானவனைக் குறித்து இரக்கமற்ற வகையில் சிரிக்கக்கூடாது. அவனது பலமான உணர்வுகளும் வேண்டுகோள்களும் மதியீனமானவைகளாக இருந்தாலும், நேர்மையான மதிப்பீடு தரப்பட வேண்டும். அவன் தன் பெற்றோர்கள், "உண்மையிலேயே என்மீது அக்கறையாக உள்ளனர்" என்று உணர வேண்டும்.[12]

[தங்களுக்கு] மதிப்பை விரும்புகின்ற பெற்றோர்கள் (பிள்ளைகளிடம்) மதிப்பைக் காண்பிக்க வேண்டும்.

கடைசியாக, பிள்ளைகள் ஒருவர் மற்றவரை மதிக்க வேண்டும். ரோமர் 12:10ன் கொள்கைகள், இல்லங்களில் எதிர்பார்க்கப்படுகிற மற்றும் அவசியமான எண்ணப்போக்காக இருக்க வேண்டும்: "... ஒருவர் மேலொருவர் பட்சமாயிருங்கள்; கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள்." கருத்துகளில் வேறுபாடுகள் அனுமதிக்கப்பட வேண்டும், ஆனால் அவமதிப்பு அனுமதிக்கப்படக் கூடாது. முதலில் இல்லத்தில் எல்லாரையும் பின்பு எல்லா மனிதர்களையும் மதித்தல்பற்றிப் பெற்றோர் போதிக்க வேண்டும்.[13]

மதிப்பின் கருத்தானது நமது வேதவசனப்பகுதியின், "பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே" என்ற பகுதியில் உள்ளார்ந்திருக்கிறது. ஆங்கிலத்தில்/தமிழில் இவ்வார்த்தைகள், நாம் நமது பிள்ளைகளைச் சரியான வழியில் (அதாவது, தேவனுடைய வழியில்) நடத்த வேண்டும் என்று வலியுறுத்துவதாகக் காணப்படுகிறது. நாம் நமது பிள்ளைகளைச் சரியான வழியிலே பயிற்றுவிக்க வேண்டும்; இந்த சத்தியமானது இவ்வசனத்தின் முழுச்செய்திக்கும் அத்தியாவசியமான பாகமாய் இருக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை. இருப்பினும் ஆங்கில/தமிழ் வசனத்தில் இல்லாத ஒரு வலியுறுத்தம், எபிரெய வசனத்தில் உள்ளது: "அவன்" என்ற வார்த்தையின்மீது வலியுறுத்தம். எபிரெய மொழியில், நேரடி அர்த்தத்தில், "அவனுடைய வழியில்" என்றுள்ளது.[14]

இந்த மூன்று வார்த்தைகளையும் ஆய்வுசெய்வதற்குச் சற்று நேரத்தை நாம் எடுத்துக்கொள்வோம். "வழி" என்பது, "பண்பு, இயல்பு அல்லது வகை" என்ற கருத்தைத் தெரிவிக்கிற எபிரெய வார்த்தையில் இருந்து வந்துள்ளதாக இருக்கிறது. நீதிமொழிகள் 30:19ல் பயன்படுத்தப்பட்ட இவ்வார்த்தையானது, "... ஆகாயத்தில் கழுகினுடைய வழியும், கன்மலையின்மேல் பாம்பினுடைய வழியும், நடுக்கடலில் கப்பலினுடைய வழியும் ..." இவ்வார்த்தையின் வினைச்சொல் வடிவம் சங்கீதம் 7:12 மற்றும் 11:12 ஆகிய வசனங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது, இவற்றில் வில்லாளிகள் தங்கள் வில்லுகளை வளைத்தல் பற்றிக் கூறப்படுகிறது. "வளைத்தல்" என்பது நீதிமொழிகள் 22:6ல் "வழி" என்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள

*வார்த்தையின் வினை வடிவத்தில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவ்விதமாக, நீதிமொழிகள் 22:6ல் உள்ள "வழி" என்கிற வார்த்தையானது ஒரு பிள்ளையின் பண்பு அல்லது இயல்பு என்பதைக் குறிக்கிறது. சிலர் இதை, அவனது, "வளைவு" என்று அழைக்கின்றனர். எனவே, "அவனது வழியில்'' என்பது, அந்தப் பண்புகளை ''காத்துக்கொள்ளுதலில், அவற்றுடன் ஒத்துழைப்பதில், அவற்றுடன் இசைந்த வகையில்'' என்று அர்த்தப்படுகிறது.*

*இது நம்மை "அவனுடைய" என்ற வார்த்தைக்குக் கொண்டு வருகிறது: "அவனுடைய வழியில்." ஒவ்வொரு பிள்ளையையும் நாம் விரும்புகின்றபடி நடக்கவேண்டும் என்று வற்புறுத்துவதோ அல்லது அவனை/அவளை, நமது கனவுகளை நிறைவேற்றும்படி ஊக்குவித்தலோ நமக்குள்ள அறைகூவலல்ல. மாறாக, ஒவ்வொரு பிள்ளையையும் "அந்தப்பிள்ளையின் உணர்வு மற்றும் ஆளுமைத்தன்மை என்ற அடிப்படை விதைக்கு'' இணங்கப் பயிற்றுவித்தலே நமக்குள்ள அறைகூவலாக இருக்கிறது.[15]*

*நமது வசனப்பகுதியின் இந்த பாகத்தில் இருந்து பல்வேறு சத்தியங்களை உய்த்துணரமுடியும். அவற்றில் பின்வரும் ஐந்து சத்தியங்களை நாம் ஆழ்ந்து சிந்திப்போம்.*

*(1) ஒவ்வொரு பிள்ளையும் தனிவகைப்பட்டதாக, ஒவ்வொரு பிள்ளையும் மாறுபட்டதாக உள்ளது. கடந்தகாலத்தில் நான், பெற்றோர்களுக்கு அவர்களின் பிள்ளைகள் "வெற்று எழுதுபலகைகளாக," அவர்களின்மீது எழுதப்படுவதற்குக் காத்திருப்பவர்களாக இருக்கின்றனர் என்று கூறியதுண்டு. விஷயத்தை நான் மட்டுமீறிக் கூறிவிட்டேன் என்று வேதாகமமும் வாழ்வும் என்னை நம்பியிணங்கவைத்துள்ளன. ஒவ்வொரு பிள்ளையும் தேவனால் தரப்பட்ட சில பண்புகள் மற்றும் விருப்பங்களுடன் பிறக்கின்றது. மோசேயினிடத்தில் கர்த்தர், "மனுஷனுக்கு வாயை உண்டாக்கினவர் யார்? ஊமையனையும் செவிடனையும், பார்வையுள்ளவனையும் குருடனையும் உண்டாக்கினவர் யார்? கர்த்தராகிய நான் அல்லவா?'' என்று உரைத்தார் (யாத்திராகமம் 4:11; ஏசாயா 44:24ஐயும் காணவும்). ஒரே குடும்பத்தில்கூட, ஒவ்வொரு பிள்ளையும் தனிப்பட்ட வகையானதாகவே இருக்கிறது. காயீனுக்கும் ஆபேலுக்கும், ஏசாவுக்கும் யாக்கோபுக்கும், அப்சலோமுக்கும் சாலொமோனுக்கும் இடையில் இருந்த வேறுபாட்டைப் பற்றி நினைத்துப்பாருங்கள். உங்கள் குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு பிள்ளையும் மற்ற பிள்ளைகளில் இருந்து வேறுபட்டிருக்கிறார்களா? விஷயம் அப்படித்தான் உள்ளது என்று நீங்கள் அறிவீர்கள்.*

*(2) ஒவ்வொரு பிள்ளையும் தனிநபர் என்ற வகையில் மதிக்கப்பட வேண்டும். "வேறுபாடு'' என்பது தன்னிலே நல்லதோ அல்லது மோசமானதோ அல்ல, மேன்மையானதோ அல்லது தீமையானதோ அல்ல; ''வேறுபாடு'' என்பது ''வேறுபாடாக'' மட்டும் உள்ளது. ஒவ்வொரு பிள்ளையும் தனிவகைப்பட்டதாக இருப்பதால், நாம் ஒவ்வொரு பிள்ளைக்கும் தனிக் கவனத்தைச் செலுத்த வேண்டும். ஒவ்வொரு பிள்ளையும் தனிவகைப்பட்டதாக இருப்பதால் நாம் சாதகமற்ற ஒப்பீடுகள்*

செய்வதைத் தவிர்க்க வேண்டும். ஒவ்வொரு பிள்ளையும் தனிவகைப் பட்டிருப்பதாக இருப்பதால் நாம் அந்த தனிநபர்த்துவத்தில் உள்ள பலங்களைக் கண்ணோக்கப் பிரயாசப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக, முரட்டுத்தனம் கொண்ட பிள்ளையானவன் பலத்த உறுதிப்பாடுகள் உடையவனாக இருக்கலாம்; பெரிய அளவில் உணர்வு அலைக்கழிப்புடைய பிள்ளையானவன் அதிகம் கற்பனாசக்தி உடையவனாக இருக்கலாம். வேறுபாடுகள் எதுவாக இருப்பினும், ஒவ்வொரு பிள்ளையும் அவன்/அவள் இருக்கும் வகைக்காகவே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

(3) இந்த வேறுபாடுகளைச் சிந்தையில் கொண்டு ஒவ்வொரு பிள்ளையும் பயிற்றுவிக்க (வளர்க்க)ப்பட வேண்டும். பல பெற்றோர்கள், “நாங்கள் எங்களுடைய எல்லாப் பிள்ளைகளையும் ஒரேமாதிரியாகவே வளர்த்தோம், ஆனால் செல்வம் (அல்லது ராணி) மோசமாகிப்போய் விட்டான்(ள்). இதை எங்களால் புரிந்துகொள்ள இயலவில்லை” என்று புலம்பியதை ஆண்டுகளினூடே நான் கேட்டிருக்கின்றேன். நான் இந்தப் பெற்றோர்களைப் பற்றி இரண்டாவது யூகம் செய்யவிரும்பவில்லை, ஆனால் அவர்கள் தங்களின் எல்லாப் பிள்ளைகளையும் “ஒரே மாதிரியாக” வளர்த்ததே ஒருவேளை பிரச்சனையாக இருக்கலாம். பயிற்சியின் சில அம்சங்கள் மாறுபட்டிருக்க இயலாது, ஆனால் மற்ற அம்சங்கள் மாறு பட்டிருக்க முடியும், மாறுபட்டிருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, சரியானது மற்றும் தவறானது பற்றி, தேவனுடைய கொள்கைகளை மாற்று வதற்கு நமக்கு உரிமையில்லை, நாம் நமது பிள்ளைகளிடம் “பட்சபாத விளையாட்டை” ஆடக்கூடாது. இதற்கு மறுபுறத்தில், நாம் ஒவ்வொரு பிள்ளையையும் “அவனது வழியில்” மற்றும் தேவனுடைய வழியில் நடத்தும் முறையை மாற்ற முடியும். நாம் ஒவ்வொரு பிள்ளையின் மேன்மையான பண்புகளையும் அதிகப்படுத்தி, குறைவாக ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய பண்புகளைத் திசைதிருப்ப முடியும். வெகுமதிகள் மற்றும் தண்டனைகள் ஆகியவற்றை, ஒவ்வொரு பிள்ளைக்கும் செயல்படக்கூடிய வகையில் தழுவியமைக்க முடியும்.

(4) ஒவ்வொரு பிள்ளையையும் நாம் புரிந்து கொள்ளுதல் அவனுக்கு/அவளுக்கு தகுதிவாய்ந்ததாக உள்ளது. நாம் நமது ஒவ்வொரு பிள்ளையைப் பற்றியும் தனித்தனியாக, தனிப்பட்ட வகையில் மற்றும் நெருக்கமாகப் புரிந்துகொள்ள வேண்டும். இது, நாம் அவனை/அவளைப் பற்றி அக்கறை கொண்டுள்ளோம் என்று காண்பிப்பதற்கு அத்தியாவசியமானதாக உள்ளது, அவனை/அவளைப் பயிற்றுவிக்க முடிவதற்கு அத்தியாவசியமானதாக உள்ளது. நமது பிள்ளைகளைப் பற்றி நாம் எவ்வாறு அறிய முடியும்? குறிப்பிட்ட வயதில் உள்ளவர்களைப் பற்றி புத்தகங்கள் நமக்குச் சில விஷயங்களைக் கூறமுடியும். நாம் அந்த வயதில் இருந்தபோது நமது நிலை பற்றிப் பின்னோக்கிச் சிந்தித்தல் சற்றே உதவமுடியும். இருப்பினும் தரமான மற்றும் அதிக அளவான நேரத்தை நமது பிள்ளையுடன் செலவிடுதல் - அவனுடன் சேர்ந்து செயல்படுதல், அவனை உற்றுக்கவனித்தல்[16] - மற்றும் நாம் அவனுடன் இருக்கையில் கூருணர்வுடன் இருத்தல் என்பதன் இடத்தை வேறெதுவும்

எடுத்துக்கொள்ள இயலாது.

நமது பிள்ளைகளைப் புரிந்து கொள்வதற்கு, சார்ல்ஸ் ஸ்வின்டால் என்பவர், "கூருணர்வு என்பதே மிகவும் அவசியமான ஒரே ஒரு கூறாக உள்ளது. தன் பிள்ளையினிடத்தில் உண்மையான கூருணர்வு கொண்டுள்ள ஒரு பெற்றோர் தமது பிள்ளையைப் பற்றி அறிவதில் சிறிதளவே சிரமம் கொண்டுள்ளனர்" என்று கருத்துத் தெரிவித்தார். அவர், தமது பிள்ளைகள் தமக்குக் கொடுத்த நகைச்சுவையான நோக்கம்பற்றிக் கூறினார்: "குண்டானவர்களுக்கு ... மற்றும் களைப்படைந்தவர்களுக்குத் தான் உணவுக்கட்டுப்பாடு தேவை." பின்பு பின்வருமாறு கூடுதலாகக் கூறினார்,

> இன்னொரு குண்டான தன்மை உள்ளது ... இது உடல்ரீதியான குண்டான தன்மையைவிட அதிகம் கவலைப்பட வேண்டியதாக உள்ளது. இது பெற்றோர்த்துவ குண்டானதன்மை என்பதாக உள்ளது ... அதாவது தொடப்பட இயலாத நிலையில் இருத்தல், விழிப்புணர்வற்று இருத்தல், உட்கண்ணோக்கு மற்றும் முன்னறிவு ஆகியவற்றில் குறைவுபடுதல். ஒரு வார்த்தையில் சொல்வதென்றால், அது கூருணர்வற்ற தன்மையாக உள்ளது. "பெற்றோரின் குண்டான தன்மை" என்பதன்மூலம் நான், நமது பிள்ளைகளை வெளியே மீட்டமைக்கிற, சோம்போறிகளாக்குகிற, முன்னதாகச் சிலவிஷயங்களைச் சிந்தையில் கொண்டவர்களாக்குகிற, அவர்களின் அமைவு மற்றும் தேவைகள் பற்றி உணர்வற்றவர்களாக்குகிற பொதுவான பிரச்சனையை அர்த்தப்படுத்துகின்றேன்.[17]

## மறு உறுதிப்பாடு [Reassurance]

ஒரு பிள்ளையை வளர்க்கும் பொறுப்பைக் கொண்டிருத்தல் என்பது அச்சுறுத்தக்கூடியதாக இருக்கலாம். உண்மையில் பெற்றோர் எவ்வளவு அதிகமாக உணர்வுடன் இருக்கின்றனரோ, அவ்வளவு அதிக மாய் அவர்களின் பொறுப்பானது அவர்களை அச்சுறுத்தக்கூடியதாக இருக்கலாம். உலகத்தின் நிலையையும், "மோசமாகிச் செல்லும்" இளம் மக்களின் எண்ணிக்கையையும் நாம் கண்ணோக்குகையில், நமக்கு உற்சாகப்படுத்துதல் அவசியமாகிறது. இவ்வாறு நமது மூன்றாவது R"மறு உறுதிப்பாடு" என்பதாக உள்ளது. நமது வசனப்பகுதியானது "அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்" என்ற வார்த்தைகளில் நமக்கு நம்பிக்கை அளிக்கிறது.

இவ்வசனப்பகுதி எதைக் கூறுவதில்லை என்பதை நான் முதலில் வலியுறுத்த என்னை அனுமதியுங்கள்: இது, "அவன் முதிர் வயதாயிருக்கையில் அதை நோக்கித் திரும்பி வருவான்" என்று கூறுவதில்லை. சிலர், "என் பிள்ளை (தன் செயலுக்கான) தீயவிளைவைப் பெற்ற பின்பு, இனியும் பாவம் செய்ய இயலாத அளவுக்குத் தொண்டுக்கிழவனான பின்பு, நான் அவனுக்குப் போதித்த வழிக்குத் திரும்பி வருவான்" என்ற கருத்தில் ஆறுதலை நாடுகின்றனர். சில பிள்ளைகள் விலகிச் சென்றுவிடுகின்றனர். அவர்கள் அவ்வாறு செய்யும்போது, ஊதாரி மகனைப்போலவே, இல்லம் பற்றிய

அவர்களின் நினைவுகள், அவர்களை இல்லத்திற்குத் திரும்பிக்கொண்டு வந்து சேர்க்கும் என்று நாம் நம்பி, அதற்காக ஜெபிக்கின்றோம் (லூக்கா 15). இருப்பினும் இவ்வசனப்பகுதி அதைப்போதிப்பதில்லை. "முதிர்வயதிலும்" என்று மொழிபெயர்க்கப்பட்ட எபிரெய வார்த்தையானது "கன்னத்தில் முடியைக் கொண்டிருத்தல்" என்று அர்த்தப்படுகிறது. சொல்லர்த்த மான மொழிபெயர்ப்பில், "தாடியுள்ள ஒருவர்" என்று இருக்கும். தனிப்பட்ட வகையில், நான் என் இல்லத்தைவிட்டுச் செல்வதற்குப் பல ஆண்டுகள் முன்னதாகவே என் முகத்தைச் சவரம் பண்ணிக்கொள்ளத் தொடங்கிவிட்டேன். இவ்வசனப்பகுதியில் "முதிர்வயதிலும்" என்பது, பிள்ளையானவன் இல்லத்தை விட்டு வெளியேறத் தயாராகின்ற அந்த "சுதந்தரத்தின் விவரிக்க இயலாத வயதை"[18] குறிக்கிறது. இவ்வசனப்பகுதியானது, பிள்ளையானவன் இல்லத்தைவிட்டு (மற்றும் அவனது பெற்றோரின் நேரடியான ஆதிக்கத்தை விட்டு) வெளியேறும்போது அவர்கள் அவனுக்கு அளித்த பயிற்சியை விட்டுவிட மாட்டான் என்று வலியுறுத்துகிறது. இவ்வசனம் பெற்றோர் தங்கள் வேலையைச் சரியாக செய்திருந்தால், பிள்ளையானவன் தான் பெற்ற போதனையிலிருந்து விலகுதல் என்பது சாத்தியமற்றதாக இருக்கும் என்று போதிப்பதில்லை. அவ்வாறு அவன் விலகிப்போனால், பெற்றோர்கள் தானாகவே தவறுசெய்தவர்கள் என்று மறைவாய் உணர்த்துவதாக இருக்கும். அப்படிப் பட்ட கருத்தானது, "விசுவாசவிலக்கத்திற்குச் சாத்தியமற்ற தன்மை" என்ற வசனரீதியற்ற உபதேசத்தின் ஒரு மாறுபாடாக இருக்கும் (1 கொரிந்தியர் 10:12ஐக் காணவும்). மற்றும், அது பிள்ளையின் சுயாதீனமான ஒழுக்க உணர்வை மறுப்பதாக இருக்கும், மற்றும் அந்தப்பிள்ளை தனது சுய வாழ்விற்குத் தானேபொறுப்பாய் இருப்பதில்லை என்ற வேதாகமரீதியற்ற நிலைப்பாட்டை மறைமுகமாய் உணர்த்துவதாயிருக்கும் (ரோமர் 14:12ஐக் காணவும்).

நீதிமொழிகள் 22:6 ஒரு நீதிமொழி என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். ஒரு நீதிமொழியானது அதன் இயல்பிலேயே, ஒரு பொதுவான சத்தியத்தை எடுத்துரைக்கிறது, ஆனால் அது முற்றான சத்தியமாக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.[19] இது அன்றாடப் நீதிமொழிகளுக்கு உண்மை யாக உள்ளது: "அதிகாலையில் எழுதலும், அதிவிரைவில் (இரவில்) தூங்கச் செல்லுதலும் ஒரு மனிதனை ஆரோக்கியமானவனாகவும், செல் வந்தனாகவும் மற்றும் ஞானமுள்ளவனாகவும் ஆக்குகிறது" என்பது ஒரு முற்றான உண்மையல்ல; இரவில் ஒரு நல்ல தூக்கமும் அதிகாலையில் வேலையைத் தொடங்குதலும், விரும்பப்படுகிற அந்த முடிவுகளை அடையப் பங்களிக்கலாம். ஆனால் அவற்றை உத்தரவாதப்படுத்த முடியாது.[20] வேதாகம நீதிமொழிகளுக்கும் இது உண்மையாகவே உள்ளது: "தன் வேலையில் ஜாக்கிரதையாயிருக்கிறவனை[21] நீ கண்டால், அவன் நீசருக்கு முன்பாக நில்லாமல், இராஜாக்களுக்கு முன்பாக நிற்பான்" (நீதிமொழிகள் 22:29), ஆனால் வேலையில் ஜாக்கிரதையாய் இருக்கின்ற பல உழைப்பாளர்கள் ஒரு நாளும் அரசர்களுக்கு முன்பாக நின்றிருந்த தில்லை மற்றும் நிற்கப்போவதில்லை.[22]

பிள்ளைகளின் வாழ்வில் பெற்றோர்கள் முதல் நிலைச் செல்வாக்குச் செலுத்துபவர்களாய் இருக்கையில், மற்ற செல்வாக்குகளும் முக்கிய மானவைகளாக உள்ளன: குடும்பத்தில் உள்ள பிற உறுப்பினர்கள், பிள்ளையின் சமவயதுத் தோழர்கள்/தோழிகள் மற்றும் பொதுவில் சமுதாயம். பெற்றோர் தரும் பயிற்சியுடன் கூடுதலாக இந்தக் காரணிகள் மற்றும் பிள்ளையின் சொந்த ஆளுமைத்திறன் ஆகியவை அவன் வாழ்வின் ஓட்டத்தைத் தீர்மானிக்க உதவுகின்றன.

நமது வேதபாடத்தின் இந்தப் பகுதியானது எதைப் போதிப்பதில்லை என்பதை நிலைநாட்டியுள்ள நிலையில், இது எதைப்போதிக்கிறது? என்று காண்போம். இது தரும் நம்பிக்கையின் செய்தி என்ன? இதன் நம்பிக்கையூட்டும் கூற்று மும்மடங்கானதாக உள்ளது. (1) உங்கள் பிள்ளையின் வாழ்வில் பல செல்வாக்குகள் செயல்தாக்கத்தை ஏற்படுத்தினாலும், நீங்கள் செலுத்தும் செல்வாக்குப்போன்று வேறு எந்த செல்வாக்கும் அதிக முக்கியத்துவம் வகிப்பதில்லை. பிள்ளைவளர்ப்புக் கலையில் நிபுணர்கள், "பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த உதாரணம் தருபவர்களாகவும் போதனையாளர் களாகவும் உள்ளனர். அவர்கள் வேறு எந்த நபர், காரணி, கூறு அல்லது குழு ஆகியவற்றைக்காட்டிலும் அதிக செல்வாக்கைக் கொண்டுள்ளனர்" என்று ஒப்புக்கொள்கின்றனர்.[23]

(2) நமது பிள்ளைகளுக்குச் சரியானவற்றைப் பயிற்றுவிப்பதில் நம்மால் இயன்ற அளவு சிறப்புற நாம் செயல்பட்டால், அவர்கள் அதைவிட்டுப் புறம்பே போகமாட்டார்கள் என்பதே இவ்வசனப்பகுதியினுடைய பொதுவான சத்தியமாக உள்ளது. இதற்கு மாறாக நடக்கும் தன்மை என்பது அவர்களுக்குப் பிரியமானதாயிருக்கலாம். ஒரு எழுத்தாளர் இவ்வசனத்தைப் பின்வருமாறு பொழிப்புரை செய்தார்: "உன் மகன், தேவனால் தனக்குத் தரப்பட்ட பண்புகளையும் விருப்பங்களையும் காத்துக்கொள்ளும்படி அவனுக்குப் பயிற்றுவி; அவன் பக்குவமடையும் போது, தான் பெற்றுக்கொண்ட பயிற்சியை விட்டு விலகாதிருப்பான்."[24]

(3) இவ்வசனப்பகுதிகள், நன்கு போதிக்கப்பட்ட ஒரு பிள்ளை, வெறுப்புணர்வு மிகுந்த உலகத்திற்குள், எதிர்ப்புகளை சாதகமாக்கிக் கொள்ளும் நிலையில் செல்லுகின்றான், போதிக்கப்படாத ஒரு பிள்ளை தன்னுடன் சாதகமாகச் செல்வதற்குச் சிறிதளவே கொண்டுள்ள அல்லது ஒன்றும் கொண்டிராத நிலையில் செல்லுவதற்கு நேர் எதிரானதாக உள்ளது.

நீதிமொழிகள் 22:6ன் பொதுவான சத்தியங்களைப் புரிந்துகொண்ட நிலையில், நாம் நமது பிள்ளைகளை வளர்த்தலில் உள்ள அறைகூவல் களைத் தன்னம்பிக்கையுடன் அணுகமுடியும். நாம் அதைச்செய்ய முடியும் என்று தேவன் கூறுகின்றார். அவர் நம் பக்கம் இருக்கின்றார்; அவர் நம் மோடு இருப்பார்!

## முடிவுரை

திரும்பவும் ஒருமுறை நான், பெற்றோர்த்துவத்தின் அறைகூவலை,

நேரம் - ஏராளமான நேரம் - எடுத்துக்கொள்ளக்கூடிய பணிப்பொறுப்பாக முன்வைத்துள்ளேன். உங்கள் பிள்ளைகள் என்றென்றைக்கும் உங்களுடன் இருக்கப் போவது இல்லை என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். காலம் விரைவாகக் கடந்து செல்லுகிறது! நீங்கள் தயாராவதற்கு முன்பாக, உங்கள் பிள்ளைகள் உங்களை விட்டுப் பிரிந்து சென்றுவிடுவார்கள்.

நாம் நமது பிள்ளைகளை அப்படிப்பட்ட ஒரு குறுகிய காலமே நம்முடன் கொண்டுள்ளோம்! எனது மூன்று பெண்மக்களும் நேற்றுதான் பிறந்ததுபோல் இருக்கிறது; ஆனால் இப்போது அவர்கள் யாவரும் வளர்ந்துவிட்டனர், இல்லத்தில் இருந்து கடந்து சென்றுவிட்டனர், மற்றும் அவர்கள் தங்கள் சொந்த இல்லங்களை நிலைநாட்டிக் கொண்டிருக்கின்றனர். நீங்கள் உங்களால் முடிகின்றபோதே, உங்கள் பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனைப் பயிற்றுவியுங்கள் … அவர்கள் முதிர்வயதாகும்போது அதிலிருந்து விலகாதிருப்பார்கள்.[25]

குறிப்புகள்

[1]இது பெர்ரி கோத்தம் அவர்களின் மனைவி, டெக்ஸாஸின் பிக்ஸ்பிரிங், என்ற இடத்தில் கிறிஸ்துவின் சபையில் ஒரு வகுப்பில் போதித்தபோது நடைபெற்றது. [2]கடல்கடந்துள்ள வாசகர்களுக்கு ஒரு குறிப்பு: தந்தையின் குறிப்புரை முரண்பாட்டின் தொடுகையொன்றைக் கொண்டுள்ளதாகக் காணப்படுகிறது: ‘‘அது ஒரு மகிழ்ச்சியான சிந்தனை’’ என்று புன்முறுவல் இன்றி (அல்லது ஒருவேளை நெற்றிச்சுழிப்புடன்) கூறுதல் என்பது “நான் இதைவிட மகிழ்ச்சியான சிந்தனைகளைக் கொண்டிருந்தேன்!” என்று அர்த்தப்படலாம். [3]மூன்று ‘‘R’’ கள் என்பது கல்வியின் அடிப்படைகளான Readin’, ’Riting (writing), and ’Rithmetic (that is, arithmetic) என்பவற்றைப் பற்றி பேசும் ஒரு நகைச்சுவையான வழிமுறையாக இருக்கிறது. [4]வழக்கம்போல, இவ்விடத்தில் நீங்கள் உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு அர்த்தமாகக் கூடிய விவரிப்புகளைப் பதிலியாகப் பயன்படுத்த வேண்டும். எனது விவரிப்பு, நான் ஏற்படுத்தும் கருத்தைப் புரிந்துகொள்ள உங்களுக்கு உதவும் என்று நான் நம்புகின்றேன். [5]இந்தப் பாடத்தின் பிற்பகுதியில் “முதிர்வயது” என்பது பற்றிக் காணப்படும் கலந்துரையாடலைக் காணவும். [6]கார்ல் பிரீச்சென் மற்றும் பவுல் ஃபாக்னெர் ஆகியோர், குடும்பத்தை வளமூட்டும் பாடத்தொடர் என்ற தலைப்பில் ஒலி நாடாத்தொடர்களை வெளியிட்டுள்ளனர் (Fort Worth, Tex.: Sweet Publishing Co., 1982). இவற்றில் முதல் தொகுப்பில் உள்ள ஒலிநாடா 1 மற்றும் 2 ஆகியவை “உங்கள் துணைக்காக வேளையைக் கண்டறிதல்” மற்றும் “உங்கள் பிள்ளைகளுக்கு நேரம் ஒதுக்குதல்” என்பவையாக உள்ளன. இந்தத்தொடர்கள் உங்களுக்குக் கிடைக்கும் என்றால், இந்தப்பாடத்திற்கு உங்கள் தயாரிப்பின் ஒரு பகுதியாக நீங்கள் இந்தத்தொடர்களைக் கேட்க விரும்பலாம். இந்த ஒலிநாடாக்களைக் கேட்கும்படி உங்கள் உரையைக் கேட்பவர்களையும் நீங்கள் உற்சாகப்படுத்தலாம். [7]1 இராஜாக்கள் 20ல் இவ்வார்த்தைகள் சாதகமாக்கும் யுக்தியாக இருந்தன, ஆனால் இவைகள், மிகவும் அலுவலாயிருப்பதின் பிரச்சனையை விவரிக்க இன்னமும் பயன்படுத்தப்படுகின்றன. [8]நீங்கள் இந்தப்பாடத்தை ஒரு வகுப்பில் பயன்படுத்தினால், உங்கள் மாணவர்களிடத்தில், ‘‘பயிற்சிக்கான பிற அத்தியாவசியங்களென்று உங்கள் நினைவுக்கு வருபவை எவை?’’ என்று கேட்க நீங்கள் விரும்பலாம். [9]KJV வேதாகமத்தில் ‘‘fear’’ மற்றும் ‘‘reverence’’

என்ற வார்த்தைகளும் "மதிப்பு" என்ற கருத்தை உணர்த்துகின்றன. [10]நான் போதிக்கின்றபோது, வழக்கமாக, "Dad should respect Mom" என்று கூறுவதுண்டு.

[11]நீதிமொழிகள் 31:28ஐயும் காணவும். [12]James Dobson, *Dare to Discipline* (New York: Bantam Books, 1977), 19. [13]உங்களுக்குக் கிடைக்கும் என்றால், Bob Hendren, "Respect," *Chosen for Riches* (Austin, Tex.: SPC Publications, 1978), 148-62 என்பது பரிந்துரைக்கக் கூடிய வாசிப்பிற்கான ஒரு நல்ல ஆதார மூலமாக உள்ளது. [14]சில வேதாகமங்களில் இந்த நேரடியான அர்த்தம் ஒரு அடிக்குறிப்பாக உள்ளது. [15]Haim G. Ginott, *Between Parent and Child* (New York: Macmillan Co., 1965), 207. [16]ஒரு பிள்ளையும்கூட அவனது செயல்களினால் அறியப்படுகின்றான் (நீதிமொழிகள் 20:11). [17]Charles Swindoll, *You and Your Child* (New York: Thomas Nelson Co., 1977), 17. [18]Ibid., 65. [19]வேதாகம வசனப்பகுதியொன்றை விளக்கப்படுத்தும்போது, "இது எவ்வகையான இலக்கியமாக உள்ளது?" என்ற ஒரு கேள்வி கேட்கப்பட வேண்டும் (சங்கீதங்கள் போன்ற) கவிதையானது கவிதை மொழியில் விளக்கப்படுத்தப்பட வேண்டும். (வெளிப்படுத்தின விசேஷம் போன்ற) இறைவெளிப்பாட்டு இலக்கியங்கள் இறைவெளிப்பாட்டு மொழியில் (அதாவது, உயர்வான அடையாளத்துவ மொழியில்) விளக்கப்படுத்தப்பட வேண்டும். அதுபோன்றே, நீதிமொழிகள் ஒரு விசேஷித்த வகையான இலக்கியமாக உள்ளது, இதுவும் முறைப்படி விளக்கப்படுத்தப்பட வேண்டும். பொதுவாகக் கூறுவதென்றால், நீதிமொழிகள் என்பவை சத்தியங்களை நிலைநாட்டுவதற்கு மாறாக சத்தியங்களை விவரிக்கின்றன. [20]இந்த நீதிமொழி உங்கள் உரையைக் கேட்பவர்களுக்குப் பழக்கமற்றதாக இருந்தால், நீதிமொழிகளின் இயல்பை விவரிப்பதற்கு ஏற்ற வகையில் நன்கு பழக்கமான ஒரு நீதிமொழியை இவ்விடத்தில் பதிலியாகப் பயன்படுத்துங்கள்

[21]KJV வேதாகமத்தில் "diligent in his business" என்றுள்ளது. நீங்கள் எந்த மொழிபெயர்ப்பைப் பயன்படுத்தினாலும், செய்தியானது ஒன்றுபோலவே உள்ளது. [22]இந்த சத்தியத்தை நிலைநாட்டுவதற்கு வேதாகமத்தில் உள்ள மற்ற நீதிமொழிகளும் பயன்படுத்தப்பட முடியும். நீதிமொழிகளின் இயல்பைப் பற்றி உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு மிகச்சிறந்த வகையில் எடுத்துரைக்கக்கூடிய உதாரணங்களைப் பயன்படுத்துங்கள். [23]Linda and Richard Eyre, *Teaching Your Children Values* (New York: Simon & Schuster, 1993), 5, 24. [24]Swindoll, 27. [25]இந்த பாடத்தை ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தினால், "தேவன் விரும்புகின்ற வகையிலான குடும்பம்" என்ற பாடத்தில் விவரிக்கப்பட்டுள்ளது போன்ற அழைப்பை நீங்கள் கூட்டிக்கொள்ளக்கூடும்.